1970 ஏப்ரல் 2]

இணைப்பு 1.

[27-ஆம் பக்கத்தில் 654-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஈட்டுறுதி செய்துகொண்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே பொருந்தும்வகையில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் முதலில் மதுரை மாவட்டத்தில் 1956 அக்டோபர் திங்களில் செயல்படுத்தப்பட்டது. அதையடுத்து, 3—6—1969 முதல் மதுரையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள ஈட்டுறுதி செய்துகொண்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் இத் திட்டம் நீட்டிக்கப்பட்டது.

(இ) மதுரையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவது உட்பட முழு மருத்துவ வசதியைப் பெற உரிமையுண்டு. ஆனால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு, மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் வசதிகள் நீங்கலாக கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அடங்கிய விரிவுபடுத்திய மருத்துவ வசதியைப் பெற உரிமையுண்டு :—

1. பொது மருத்துவ வசதிகள்—இவற்றில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களில் சிகிச்சை பெறுவது உட்பட, பின் வருபவை அடங்கும் :—

சிறப்புத்திறனும் அனுபவமும் தேவைப்படுகிற சிகிச்சையைத் தவிர எல்லா சிகிச்சையும் ;

அம்மைத் தடுப்பு ஊசி போடுதல், பிற நோய்த் தடுப்பு ஊசி போடுதல் போன்ற நோய்த் தடுப்புச் சிகிச்சை ;

தேவையெனக் கருதப்படுகின்ற எல்லா மருந்துகளும், கட்டுப்போடும் சாதனங்களும் இலவசமாக வழங்குதல் ;

தேவையான நேர்வுகளில் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று பார்த்தல்.

2. ஈட்டுறுதி செய்துகொண்டவரின் மனைவிக்குக் கொடுக்கப்படும் இலவச மகப்பேறு வசதிகளில் பின்வருவன அடங்கும் :—

தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் பேறுகாலத்திற்கு முன்பும், பேறுகாலத்திற்கு பின்பும் சிகிச்சை அளித்தல் ;

ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் வீடுகளுக்குப் பேறு காலத்தில் பேறுகால உதவியாளர் சென்று கவனித்தல் ;

[1970 ஏப்ரல் 2

ஆம்புலன்ஸ் அல்லது மற்ற ஏற்பாட்டின்மூலமாக, தேவையான காலத்தில் நோயாளிகளை மருத்துவ மனைக்கு இலவசமாக எடுத்துச் செல்வதற்கான வசதிகள் ;

குறிப்பிட்ட நோய் சிகிச்சையில் வல்லுநரைக் கலந்தாலோசித்தல், அவரிடம் சிகிச்சை பெறுதல், அத்தகைய தன்மையிலும் அளவிலும் சிறப்பு ஆய்வு.

(*a*) The Employees State Insurance Scheme was first implemented in Madurai district in October 1956, covering the insured workers only. Subsequently, the Scheme was extended to the families of insured workers, in Madurai and suburbs, with effect from the 3rd June 1969.

(*b*) The insured workers in Madurai and suburbs are entitled to full medical care, including hospitalisation. But their family members are entitled to expanded medical care, which consists of the following arrangements, *except hospitalisation facilities*—

I. General Medical Services, which shall include treatment at the State Insurance dispensaries and shall consist of—

(i) all treatments other than treatment involving the application of special skill and experience;

(ii) such preventive treatment as vaccination and inoculation;

(iii) free provision of all drugs and dressings that may be considered necessary;

(iv) Domiciliary visits where necessary.

II. Free maternity services to the wife of an insured person consisting of—

(i) ante-natal and post-natal treatment at the State Insurance dispensary;

(ii) attendance by a Maternity Assistant on confinement at the residents of the insured persons.

(iii) facilities for the removal, free of charge to hospital where necessary by ambulance or otherwise :

(iv) specialist consultation and treatment and special investigation of such nature and such scale.